**மாதிரி வினாத்தாள்**

அளவிடும் கருவிகள் - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. : | | | | | |

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 00:30:00 Hrs

Total Marks : 15

## பகுதி - அ

5 x 1 = 5

1) திருகு அளவு என்பது .............. அளவுக்குப் பரிமாணம் உள்ள மிகச் சிறிய பொருட்களை அளவிடும் கருவியாகும்.

(a) 0.1 cm (b) 0.01 cm (c) 0.1 mm (d) 0.01 mm

2) திருகு அளவியின் தலைக்கோல், சுழிப்பிரிவு, புரிக்கோலின் வரை கோட்டிற்கு கீழ் அமைகிறது, எனில் சுழிப்பிழை .................

(a) நேர்குறி (b) எதிர்குறி (c) இல்லை

3) திருகு அளவி ..................ன் விட்டத்தை அளக்கப் பயன்படுகிறது.

(a) கடப்பாரை (b) மெல்லிய கம்பி (c) கிரிக்க்கெட் பந்து

4) ஓர் ஒளி ஆண்டு என்பது ............ஆகும்.

(a) $365.25 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8 m$ (b) $1 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8 m$ (c) $360 \times 24 \times 60 \times 60 \times 3 \times 10^8 m$

5) வானியல் அலகு என்பது புவியின் மையத்திற்கு ..............ன் மையத்திற்கும் இடைப்பட்ட சராசரித தொலைவு.

(a) நிலா (b) சூரியன் (c) செவ்வாய்

## பகுதி - ஆ

5 x 2 = 10

6) பின்வரும் கூற்றுகளில் உள்ள தவறுகளைத் திருத்துக.

அ) வானியல் அலகு என்பது புவிப்பரப்பிற்கும், சூரியனின் பரப்பிற்கும் இடைப்பட்ட சராசரி தொலைவு ஆகும்.

ஆ) ஒளி ஆண்டு என்பது ஒளியானது ஓர் ஆண்டில் நிமிடத்திற்கு $3 \times 10^8 m$ வேகத்தில் பயணம் செய்யும் தொலைவு ஆகும்.

7) A தொகுதியை B தொகுதியோடு பொருத்துக.

| வ.எண் | தொகுதி - A | தொகுதி - B |
|---|---|---|
| 1. | சிறிய பரிமாணங்கள் | கிலோமீட்டர் |
| 2. | பெரிய பரிமாணங்கள் | திருகு அளவி |
| 3. | அதிகத் தொலைவு | அளவுகோல் |
| 4. | சிறு தொலைவு | ஒளி ஆண்டு |
| | | ஆல்டி மீட்டர் |


8) கோடிட்ட இடங்களை நிரப்புக.

மிக நீண்ட தொலைவுகளை லாக்கப் பயன்படும் சிறப்பு முறைகள் .................. , .................. ஆகும்.

(லேசர் துடிப்பு முறை, ஒளி ஆண்டு முறை, ரேடியோ - எதிரொளிப்பு முறை, வானியல் முறை)

9) மீச்சிற்றளவை என்பது திருகு அளவியோடு தொடர்புடைய ஒரு முக்கியக் கருத்து ஆகும். திருகு அளவியின் மீச்சிற்றளவை என்பதன் பொருள் என்ன?

10) திருகு அளவி படத்தில் கீழ்காணும் பாகங்களைக் குறிக்கவும்.



அ) தலைக்கோல்

ஆ) புரிக்கோல்

இ) வரைகோடு

ஈ) பற்சக்கர அமைப்பு

*******************************************